சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை-08

ந.க.எண். 244/அ7/2024, நாள்.08 .01.2024

பொருள்: பள்ளிக் கல்வி - சென்னை மாவட்டம் - தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் சார்பில் நடைபெறும் புத்தகக் கண்காட்சி மற்றும் "சென்னை வாசிக்கிறது" என்னும் நிகழ்வில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்வது சார்பாக.

பார்வை: 1. செயலாளர், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் கடிதம் நாள். 02.01.2024.

2. சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை-08, ந.க.எண். 244/அ7/2024, நாள்.06 .01.2024.

.....

பார்வையில் காண் கடிதத்தின்படி, சென்னை தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் சார்பில் 47 ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சி ஜனவரி 3 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெறுகிறது. இப்புத்தகக் காட்சியினை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் விதமாக 09.01.2024 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் அமைந்துள்ள புத்தகக் காட்சி வளாகத்தில் "சென்னை வாசிக்கிறது" என்னும் நிகழ்வு நடைபெறவுள்ளது எனப் பார்வையில் காணும் செயல்முறைகளின் படி தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வு தொடர் மழையின் காரணமாக 12.01.2024 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது என்ற தகவல் அனைத்து அரசு/ஆதிதிராவிட/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொடக்க/உயர்/மேல்நிலைப் பள்ளித்தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிகழ்விற்கு 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளைப் பங்கேற்கச் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு

Scanned with OKEN Scanner

அனைத்து அரசு/ஆதிதிராவிட/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொடக்க/உயர்/மேல்நிலைப் பள்ளித்தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆர்வமுள்ள மாணவர்களை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள உரிய ஏற்பாடுகள் செய்யுமாறு அனைத்து அரசு/ஆதிதிராவிட/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொடக்க/உயர்/மேல்நிலைப் பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு: விவரங்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

அனைத்து அரசு/ஆதிதிராவிட/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளித்தலைமை ஆசிரியர்கள்/முதல்வர்கள், சென்னை மாவட்டம்

நகல்

மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை) வட சென்னை & தென் சென்னை மற்றும் தனியார் பள்ளிகள், சென்னை மாவட்டம்.

Scanned with OKEN Scanner